**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022.**
**வழக்கு சாட்சி – அ.சா. 5.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சிவக்குமார். | ஜாதி | |
| தந்தை பெயர் | M. காமாட்சி. | தொழில் | கூலி வேலை. |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 43/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, இருசக்கர வாகன மெக்கானிக் ஷாப்பில் கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது, என்னிடம் இந்நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 24.04.2018 ஆம் தேதியன்று, காலை 10.00 மணிக்கு, அல்லிநகரத்தில் உள்ள வெள்ளையன் தெருவில் எங்கள் வீட்டருகே நானும், முரளிதரன் என்பவரும் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது, அல்லிநகரம் போலீசார் அங்குவந்து, மருதுபாண்டி, குருவம்மாள் அவர்களுக்கும், காமாட்சி ஆகியோர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக, போலீசார் படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் சாட்சியாக இருக்கக் கேட்டுக்கொண்டதனால், நானும், முரளிதரன் என்பவரும் கையெழுத்துச் செய்தோம். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனது வீடு எந்தத் தெருவில் உள்ளது என்றால், சிட்டு பிள்ளைத் தெருவில் உள்ளது. சம்பவ இடம் அருகே எனக்கு வீடு எதுவும் இல்லை என்றால், சரிதான். சம்பவம் சம்பந்தமாக போலீசார் என்னை கையெபத்து போடச் சொன்னதன்பேரில், நான் கையெழுத்துச் செய்தேன் என்றால், சரிதான். பார்வை மகசரில் என்ன

எழுதியிருந்தது என்று நான் படித்துப் பார்த்தேனா? என்றால், படித்துப் பாத்தேன். பார்வை மகசரைத் தவிர வேறு எதிலும் கையெழுத்து வாங்கினார்களா? என்றால், இல்லை. அ.சா.4 என் அப்பா என்பதால், நான் இந்த வழக்கில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்துச் செய்யவில்லை என்றாலும், நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்துச் செய்தேன் என்றாலும், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.16 20:54:04 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**